12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு
சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள் அருளியது

# அருள் வழியில் புரட்சி நிகழ்வு

ஓம் குருவே போற்றி! ஓம் குரு குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!



**இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்.**
(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரணோடையில் கோயில் கொண்டருளுபவர்)

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,119 புரட்டாசி மாதம்.

## இந்து இலக்கியக் கழகம்

காணிக்கை: ரூ 10/-

# <u>உள்ளுறை</u>

**1. “கோவை மாவட்ட மூன்றும் முப்பெருவிழா” - கோவை மாவட்டச் செயல்வீரர்களுக்கு 12.11.83இல் குருதேவர் அவர்கள் விடுத்த அஞ்சலின் நகல்.**

**2. “செயல் விளக்க அறிவிப்பும் செயல்திட்டக் குருவாணையும்” - மதுரைச் சித்தரடியார் அருள்மிகு ஆலவாய்மூதூர் தத்தனேரிச் சுடலைப் பத்திரக்காளி சன்னிதானம் அவர்களுக்கு 30/11/1983இல் குருதேவர் அவர்கள் விடுத்த அஞ்சலின் நகல்.**

**3. “நான்காவது முப்பெருவிழா ஏற்புத் திருவோலை” - மதுரை மாவட்ட இ.ம.இ., அ.வி.தி. சித்தர்நெறி ஆர்வலர், ஆதரவாளர் முதலியோர் அனைவருக்கும் 10/12/1983இல் குருதேவர் அவர்கள் விடுத்த அஞ்சல் வடிவக் கட்டுரையின் நகல்.**

---

**“அருளுலகில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்”**

-- குருபாரம்பரிய வாசகம்.

**<u>விளக்கம்</u>**:- ‘அருளுலகில்’ என்றால் தனிமனித அன்றாட வழிபாடுகள், கோயில் வழிபாடுகள், கூட்டு வழிபாடுகள், கோயில் குடமுழுக்குப் பூசைகள், வீட்டில் செய்யப்படும் அமாவாசைக்கான முன்னோர் வழிபாடுகள், பிறப்பு - திருமணம் - இறப்பு, ... ஆகியவற்றிற்கான சடங்குகள், வீடு மற்றும் தொழில் செய்யும் இடங்களில் நடத்தப்படும் சிறப்புப் பூசைகள், ... ... போன்றவற்றைக் குறிக்கும்.

# கோவை மாவட்ட மூன்றும் முப்பெருவிழா

## செயல் ஊக்க அழைப்பு அறிவிப்புத் திருவோலை

12.11.83இல் ஞானத்தந்தை, தலைவர், குருதேவர், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரர் தமது அருட்பணி விரிவாக்கத் திட்டச் சுற்றுப்பயணம் 18.11.83 முதல் 21.11.83 வரை நிகழுவதில் பங்கு பெற்று ஆக்கப் பணிகளில் ஊக்கமுடன் ஈடுபட விடுக்கும் 'செ.ஊ.அ.அ.தி.'

[ (i) C. நாகமாணிக்கம் (D.S.P.), (ii) B. ஞானசேகரன் B.Sc., (iii) அ. நந்தகோபால், (iv) S. சிதம்பரம், கோவை - 641302. ]

(1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே என உணர்ந்து அடக்கமாக, அமைதியாக, பொறுப்பாக, பொறுமையாக, சமாதானமாக, கனிவாக, துணிவாக ... பணிவுடன் செயல்படுபவர்களாக இருக்க வேண்டும் நம்மவர்கள். அனைவரும் ஒன்றுகூடி ஒற்றுமையுடன் ஒருமித்த கருத்துடன் கலந்து பழகி எமது அருட்பயணத் திட்டங்களைத் திட்டமிட்டுச் செயலாக்குங்கள்.

(2) பொருளுலக இருளெல்லாம் அகற்றவே இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக இலைமறை காயாக இருந்து இந்து மறுமலர்ச்சி இயக்கம் [இ.ம.இ.] அரசுப் பதிவைப் பெற்று [135/83] இப்பொழுது வெளிப்பட்டுச் செயல்படுகிறது. இது முழுமையான வெற்றி பெற்ற பின்னும் பலகாலம் நிலையான பயனளிக்கும்

வண்ணம் தத்துவ வளமும், செயல்முறைச் சித்தாந்த வலிவும், மானுட வாழ்வுக்குரிய மென்மை, நன்மை, நளினக் கனிவுப் பண்புகளின் துடிப்பும் நிறைந்த ஓர் இயக்கம்.

எனவே, இந்தியாவை மக்கள் விரோத துரோகச் சத்திகளே விடுதலையின் பெயரால் ஆளுவதைத் தடுக்கச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைக்கும் 'எண்ணப் புரட்சி, உணர்வுப் புரட்சி, கருத்துப் புரட்சி, பண்பாட்டுப் புரட்சி ... முதலியவை உருவாக்கப் பாடுபடும் தரமும், உரமும், தீரமும், வீரமும், அறமும், மறமும்' ... உடையவர்களே இ.ம.இ.யால்தான் உருவாக்க முடியும். இதனை **அருள்வழியில் புரட்சி நிகழ்வுகளே** [Revolution through Divine Means] அமைத்தே சாதிக்க முடியுமென்பதால் 'அருட்பணி விரிவாக்கத் திட்டம்' இம்மண்ணுலகில் பன்னிரண்டாவது முறையாக எம்மால் துவக்கப் படுகிறது.

'கருவறைப் புரட்சிகள்', 'மானுட வாழ்வுணர்வுப் புரட்சிகள்', 'தெய்வீகச் சாதனைப் புரட்சிகள்', 'சமூகவியல் புரட்சிகள்' ... முதலிய அனைத்தையும் மகாத்மா காந்தியின் அன்பு வழியில், அமைதி வழியில், அற வழியில், சமாதான வழியில் நிகழ்த்தவே யாம் குருதேவராக, தலைவராக, ஞானத் தந்தையாகச் செயலாற்றுகிறோம். புரிந்தும் புரியவைத்தும் செயல்படுக.

(3) எம்மோடு மூன்று பெரும் சன்னிதானங்கள் வருகின்றனர்கள். அருட்பட்டம் பெறுபவர் எம்மோடு புகைப்படம் எடுத்துப் பூசையில் வைப்பதாலும்; எம்மால் இட்டும் தொட்டும் சுட்டியும் விளக்கப் படுவதாலும்; யாமே, இம்மண்ணுலகின் முதல் அரசயோகியாகவும், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானமாகவும், இராசிவட்ட நிறைவுடையாராகவும் செயல்படுவதாலும் ... எம் காலத்தில் விரைவில் மானுடர்கள் பத்தி நிலைகள், சத்தி நிலைகள், சித்தி நிலைகள், முத்தி நிலைகளைச் சிறப்பாக அடைந்து அருட் குடும்பமாகிடலாம்.

யாம், ஞானாசிரியனாக நாடெங்கும் சாகாக்கல்விக் கூடங்கள், தவச் சாலைகள், வேள்விப் பள்ளிகள், அருட்கலைக் குருகுலங்கள், மோனக்கலைச் சோலைகள்... உருவாக்கிச் செயல்படுகிறோம். அவரவர் ஆர்வத்துக்கும், ஆற்றலுக்கும், முயற்சிக்கும், பயிற்சிக்கும் ஏற்பத் தேர்ச்சி நிலைகள் பெறலாம். பிறவிப் பயன் பெற, மறவாப் பேரின்பங்களைத் துய்க்க, இறப்பிறப்பற்ற உருவ அருவ அருவுருவ நிலைகளைக் காணலாம், பெறலாம். வாரீர்! வாரீர்! வாரீர்! ... அருட்கொடை வழங்கப் படுகிறது! வாய்மையிது! உய்வு பெற வாரீர்! வாரீர்! வாரீர்!

"சில ஆயிரம் பிறதிகள் வசதி போல் அச்சிடுக" - குருவாணை.

**(ஒப்பம்)**

**ஞாலகுரு சித்தர் கருவூரார்.**

**//உண்மை நகல்//**

<u>நகலெடுத்தவர்</u>: அருள்மிகு தில்லைப் பொன்மன்றில் ஆடுகின்ற கூத்தர்ப் பெருமான் சன்னிதானம், ஆதிபராசத்தி ஆதீனம், சித்தரடியார் ஏ.இரவி., 14/11/83.

**//இதன் மூலம்: சித்தரடியார் திரு ஏ.இரவி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# <u>செயல் விளக்க அறிவிப்பும் செயல்திட்டக் குருவாணையும்</u>

30/11/1983இல் ஞாலகுரு சித்தர் கருவூரூர் அருள்மிகு ஆலவாய்மூதூர் தத்தனேரிச் சுடலைப் பத்திரக்காளி சன்னிதானம் பெரி. முத்தையா அவர்கள் சமூகத்துக்கு விடுக்கும் செ.வி.அ.-செ.தி.கு.

**1.** அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! யாவும் உண்மையான வெற்றியைப் பெற்று நன்மையை நல்கிடும்.

**2.** 'மதத்தை ஒரு விஞ்ஞானமாக்கி யார் வேண்டுமானாலும் அநுபவப் பூர்வமாக மதத்தின் பேருண்மைகளை அறியலாம், ஆராயலாம், உணரலாம், பயன்படுத்தலாம், மத விஞ்ஞானியாகலாம்' என்ற பகுத்தறிவுப் போக்கைச் சமயத்துக்கு வழங்கி சமுதாய மறுமலர்ச்சிப் பணியைத் துவக்கியுள்ளோம் நாம். நமக்குள் தனிமனித ஆதிக்கம், சர்வாதிகாரம்; வழிநடத்தல் ... கூடவே கூடாது.

நம்மவர்கள் <u>சித்தர் நெறியை விளக்கும் அடிப்படைக் கருத்துக்களை விளக்கும் எமது அஞ்சல்கள், கட்டுரைகள், அச்சிட்ட அறிக்கைகள், சிறுநூல்கள்... முதலியவற்றை அன்றாடம் இரண்டரை (2½) மணி நேரம் (ஒரு சாமம் = யாமம்) படித்தேயாக வேண்டும்.</u> <u>**அதுதான் கருத்து விளக்கம் தரும்**.</u> <u>இதேபோல் பகலில் 11-1½ அல்லது இரவில் 11-1½ ஏதாவது ஒரு நேரம் கலசப் பூசை செய்தேயாக வேண்டும். அதுதான் பத்தி, சத்தி, சித்தி, முத்தி நிலைகளை உணரவும்; திருவருள், தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருள், குருவருள், உலக அருளாளர் துணை [ஆதரவு] முதலியவைகளைப் பெற்றுத்</u>

தரும். **இதன்மூலம் நம்மவர்கள் அருட்பணிக்குரிய ஆற்றலைப் பெற்றிடுவார்கள்.**

**3.** எப்படியும் இந்தியாவில் ஒவ்வொரு மொழியினரும் தனித்தனி உரிமை ஆட்சி பெற்றிடுவர். மொழிவழி இனங்கள் விடுதலை பெற்ற பிறகு மொழி வெறி, மொழி ஆதிக்கம், மொழி சுரண்டல், மொழி ஏகாதிபத்தியம் ... முதலியவைகள் ஒழியும். அதன்பிறகு, உருவாகும் இந்தியக் கூட்டாட்சி [The United States of India] "ஐக்கிய மாநில இந்தியக் கூட்டாட்சி அரசு" என உருவாகும். அப்பொழுது எல்லா இனங்களும் செழிக்கும். அதற்குரிய விழிப்புணர்வு உருவாகிட **இந்திய வரலாறு** என்று இன்றுள்ள மோசமான, மோசடியான வரலாறு முழுமையாகத் திருத்தப்படல் வேண்டும்.

வின்சென்ட் சிமித் (Vincent Smith) என்ற இங்கிலாந்துக் காரன் தனிமனித முயற்சியில் தேடித் தொகுத்த செய்திகளே இன்று வரை இந்திய வரலாறு என்று நம்பப் படுகின்றது. பதினெண்சித்தர்கள் தமிழ்மொழியில் உலக வரலாற்றையே வழங்கியுள்ளனர் என்ற பேருண்மை முதலில் இந்தியர்களுக்காவது புரிய வேண்டும். அதற்குரியன எழுத்து, பேச்சு, செயல் என்ற மூன்று நிலைகளாலும் கடந்த இரண்டு நூற்றுண்டுகளாக [சித்தர் ஏளனம்பட்டியார் காலத்திலிருந்து] எடுக்கப்பட்டும் உரிய பயன் விளையவில்லை.

எனவேதான், எம் தந்தை எம்மை தன்னிச்சையாக உருவாக்கிச் செயல்படச் செய்துள்ளார். யாமும் பல நூறுயிரக் கணக்கானவர்களை உருவாக்கிச் செயல்படச் செய்தோம். பெரும்பாலானவர்கள் தன்னல வெறியர்களாக, பேராசைக் காரர்களாக, குறுகிய கண்ணோட்டம் உடையவர்களாகப் போய்விட்டார்கள். எனவேதான், "நிறுவன நிர்வாகக் கட்டமைப்பும் ஒழுங்கும்" உருவாக்குகிறோம் யாம். உணர்ந்தும்! உணர்த்தியும்! செயல்பட உங்களைப் போன்றோரையும்

உருவாக்கியுள்ளோம். **நீங்கள்தான் பொறுமையுடனும் பொறுப்புடனும் செயல்படல் வேண்டும்.** உங்களைப் போன்றோரால்தான் செயல் திட்டங்கள் கண்டிப்போடு செயலாகும்.

(a) உடனடியாக நீலமேகம்பிள்ளை அச்சிட்ட ‘அருளுலக ஆட்சிமொழி’ 1000 (ஆயிரம்) நகல்கள் தேவை. **காலதாமதம் கூடவே கூடாது**. அவரைக் கண்டிக்கிறோம்; நேரில் தர வேறு அச்சிடட்டும். குருவாணை 30/11/1983.

(b) சிறுமுகையூரில் யாம் ரூ.301.00 காணிக்கைப் பணத்தைக் கொடுத்தும் இரவிந்திரன் ‘ஓர் இந்துமத விளக்கம்’ அச்சடித்து இன்னும் அனுப்பவில்லை. கண்டிக்கிறோம். உடனே, **சில நூறு பிறதிகளாவது தேவை.** (1000 அவசியம்). அச்சடித்து அனுப்பும் பொறுப்பை அவனிடம் ஒப்படைக்கிறோம்.
குருவாணை 30/11/1983.

(c) மேலமடைப் பாண்டியன், வேம்படியான் மணி ஆகிய இருவரையும் அச்சிடுமாறு சில கட்டுரைகள் அனுப்பியுள்ளோம். அவற்றை அவசியம் அச்சிட்டு ஒவ்வொன்றிலும் 1000 பிரதிகளாவது அனுப்புக. சென்னை வட்டாரத்தில் இவை தேவை. குருவாணை 30/11/1983.

(d) ஆங்காங்கே அ.வி.தி. நிலையங்களும், இ.ம.இ. கிளை அலுவலகங்களும் அமைத்திடுக. நம்மவர்கள் மின்னல் வேகச் சுற்றுப்பயணங்களை மேற்கொள்ள வேண்டும்.
குருவாணை 30/11/1983.

(e) கிளை அலுவலகப் பதிவு அட்டைகள், உறுப்பினர் சந்தா புத்தகம் அச்சடித்தால்தான் நாம் வலிமைப் படுவோம். இல்லையேல் அரசியல், சமய, சமுதாய, கலை, இலக்கியத் துறையினர் நம்மை **விழுங்கிட முயல்வார்கள்**. இவர்கள் பணம், பதவி, புகழ், .....

முதலியவற்றின் சுவையை அறிந்தவர்கள். நாம் எச்சரிக்கையோடும் வடிவமைப்போடும் செயல்படல் வேண்டும்.
குருவாணை 30/11/1983.

**4. “*இந்திய விடுதலை*** கேட்டுப் போரிட்ட உண்மையான தீவிரவாதிகள் மூடி மறைக்கப்பட்டுச் **சமய சமுதாய கலை இலக்கியப் பண்பாட்டு விரோதிகளும், துரோகிகளும் இந்திய விடுதலை வரலாற்றின் தலைவர்களாக** விளம்பரம் செய்யப்பட்டு விட்டனர். இந்த மோசடியான, மோசமான வரலாற்றை விளக்கும் தரம், தீரம், திறம், வீரம், மறம், அறம் ..... நம்மிடம்தான் உண்டு. பிருமணர்கள் (பிற + மண்ணினர் => அன்னியர்) இந்திய மொழிகளை, இனங்களை நலிவடையச் செய்து ஒரு புதிய ‘**இந்திய மாயை**’ உருவாக்கப் பார்க்கிறார்கள். இது தவறு. மாபெருந் தோல்வி பெறும்.

“சமசுக்கிருத மொழியைத்தான் இந்தி என்ற பெயரால் திணிக்கிறார்கள். இந்துமதத்தின் பெயரால் பல சாதிகளை உண்டாக்கி மக்களை அடிமைப்படுத்திச் சுரண்டியும், ஏமாற்றியும் வாழ்ந்த பிருமணர்கள்தான்; இன்று ‘இந்தியா’ என்ற மாயாவாத அரசியலின் பெயரால் பல கட்சிகளை உண்டாக்கி மக்களை அடிமைப்படுத்திச் சுரண்டியும் ஏமாற்றியும் வாழுகிறார்கள். இவர்களின் **வேதநெறிக்குரிய இந்துமதம்தான் மக்களை மயக்கும் மது; முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடும் சாதனம்; முதலாளிகளுக்குப் பாதுகாப்பு; ஏழையை மாயாவாதத்தால் அடங்கி ஒடுங்கி வாழச் செய்வது; தீண்டாமையைப் போதிப்பது; சாதிவெறிகளையும், சண்டைச் சச்சரவுகளையும் வளர்ப்பது; அறியாமை, மடமை, மூடநம்பிக்கைகளைக் காப்பாற்றுவது; காட்டுமிராண்டித்தனங்களைப் புகுத்துவது.....**

"எனவே, பிருமணிய மறுப்பும் வெறுப்பும் விரைவில் மாபெரும் போராகவே மாறிப் பாரதப் போரின் அழிவு போன்ற அழிவை விளைவித்தால்தான் இந்நாடு நிலையான செழிப்பையும், செழிப்பைக் காக்கும் விழிப்பையும் பெற்றிடும். இதை உணர்ந்து செயல்படும் உண்மைத் தலைவர்களே இந்திய மறுமலர்ச்சிச் சிற்பியாவார்கள்."

... என்று எம் தந்தை '**இந்தியாவின் வருங்காலம்**' என்ற நூலில் எழுதியிருப்பதை இங்கு குறிக்க விரும்புகிறோம். புரிந்து செயல்படுக!

**5.** (a) இன்றுள்ள இந்திய அரசியல்வாதிகள்; 'இந்திய விடுதலைத் தலைவர்களின் பரம்பரை...' என்று உரிமை பாராட்டுவதால் 'இந்திய விடுதலை வரலாறு ஒரு மாயை! பொய்! மோசடி! தவறானது!' ... என்ற பேருண்மையை விளக்கியேயாக வேண்டும்.

(b) முப்பத்தேழாண்டுகள் *(1983இல்)* ஆகியும் நோயாளிகள், பிச்சைக்காரர்கள், அனாதைகள், ஆதரவற்ற பெரியவர்கள், வேலையில்லாத இளைஞர்கள்... தெருத்தெருவாகத் திரியும் நிலை மாறவே இல்லை. ஆனால், உலக அரசியல் பற்றிய விழாக்களும், மாநாடுகளும், பிறவும் கோடிக்கணக்கான ரூபாய் செலவில் கொண்டாடப் படுகின்றன. விலைவாசி ஏற்றம், மொழிப் போர், பணச் சண்டை, பதவிச் சண்டை, இனச் சண்டை, சாதி வெறி, மத மாற்றம்.... எனும் குறைகளைப் பேசவே மறுக்கும், மறக்கும் அரசியல் தலைவர்களே அதிகம். இதற்கு முடிவு யார் செய்வது? எந்தத் தத்துவத்தால் மக்களின் கவலைகளுக்கும், தொல்லைகளுக்கும் முடிவு தரமுடியும்? அதுதான் சித்தர் நெறி; இ.ம.இ., அ.வி.தி. அருளாளர்கள்......

(c) எம் தந்தை '**கம்யுனிசத்திலிருந்து விலகுகிறேன்**' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரைகளின் ஒரு கண்ணோட்டம்..... :

(i) “கார்ல் மார்க்சு, தொழில் வளம் நிறைந்த இங்கிலாந்தில் புரட்சி நடக்கும் என்று கூறினர். ஆனல், விவசாய நாடுகளான இரசியாவிலும், சீனவிலும்தான் புரட்சி நடந்தது.

(ii) “கார்ல் மார்க்சு, கம்யுனிச நாடுகள் ஒன்றுபட்டு இணைந்து உலகத் தொழிலாளர்கள் ஒற்றுமைக்கும், விடுதலைக்கும், உயர்வுக்கும் பாடுபடும் என்று கூறினர். ஆனல், கம்யுனிச நாடுகள் ஒன்றையொன்று தாக்குகின்றன; போரிட்டு மாறுபட்டு வேறுபட்டு நிற்கின்றன. கம்யுனிச நாடுகளில் தொழிலாளர்கள் சங்கம் வைத்துப் போராடித்தான் நன்மை பெற முடிகிறது. தொழிலாளர் நல விரோதப் போக்கும் நோக்கும் கம்யுனிச ஆட்சியிலும் உள்ளது.

(iii) “கார்ல் மார்க்சு, கம்யுனிசம் நாடு, இனம், மொழி, வட்டாரம் ... என்ற குறுகிய எல்லைகளை உடைத்துத் தகர்த்து உலகம் முழுவதும் தொழிலாளர் ஒற்றுமையை உருவாக்கும் என்றர். ஆனல், கம்யுனிச நாடுகளில் இனப் போர், கொலை வெறி தாண்டவ-மாடுகிறது. மொழி ஆதிக்க எதிர்ப்பு முகாம்கள் வளருகின்றன. கம்யுனிசத் தலைவர்களுக்கிடையே வட்டார வெறியால் போராட்டமும், பூசலும், சண்டையும் நிலைத்து வளருகின்றன. இந்தியாவில் என்றைக்கும் கம்யுனிசம் வளர முடியாது என்பது வெட்டவெளிச்சமான உண்மை. பணக்காரர்களும், சாதியில் உயர்ந்தவர்களும், மத வெறியர்களும், வட்டார வெறியர்களும், பதவி வெறியர்களும், ஒற்றுமைப்படும் எண்ணமே இல்லாதவர்களும்தான் இந்தியக் கம்யுனிசத்தை இயக்குகிறர்கள். இந்நிலை மாறவே மாருது. கம்யுனிசமும் வளராது.

(iv) “மார்க்சியத்தை ஆங்கில மொழியிலோ, செர்மன் மொழியிலோ, இரசிய மொழியிலோ, சீன மொழியிலோ

முழுமையாகப் புரியவே முடியாது. **<u>பிரெஞ்சு மொழியில்தான் புரிய முடியும்.</u>** இதற்குரிய வாய்ப்பு இந்தியக் கம்யுனிசத் தலைவர்களுக்கே கிடைக்கவில்லை. தொண்டர்களுக்கு எப்போது கிடைக்கும்? மக்களுக்கு எப்படிக் கிடைக்கும்? **<u>மார்க்சியம் இந்துமதத்தின் ஒரு பிரிவாக அறிவிக்கப்பட்டு பொதுமக்களால் ஏற்கப்பட்டால்தான் வெற்றி கிடைக்கும்</u>**.

"நான் மார்க்சியத்தை விடப் பதினெண்சித்தர்களின் <u>அரச பாரம்பரியம்</u>, <u>குரு பாரம்பரியம்</u>, <u>இலக்கிய பாரம்பரியம்</u> எனும் மூன்றும் தரும் சமுதாய, அரசியல், பொருளாதாரச் சித்தாந்தங்களும் உயர்ந்தவை, பயனுடையவை... என்று உணர்ந்தே கம்யுனிசத்தை விட்டு விலகுகிறேன்....."

..... என்று எழுதியதை இங்கு அப்படியே குறிக்கிறோம். உணர்ந்தும் உணர்த்தியும் செயல்படுக!

6. **<u>எந்தவித முறையான அரசியலறிவோ! பயிற்சியோ! வாழ்வியல் நுகர்ச்சியோ! பொதுநல நாட்டமோ! ... இல்லாதவர்கள்தான் பெரும்பாலும் இன்றைய அரசியல்வாதிகள். எனவே, பல நல்லவர்கள் அரசியல் தலைவர்களாக இருந்தும் கூட மக்களுக்கு நன்மை ஏற்படவில்லை</u>**. இதை நன்குணர்ந்த மகான்களும், ஞானிகளும், தவசிகளும்... பிடிவாதமாகப் போராடி எமது தனிமைத் தவத்தைக் கலைத்து எம்மை நாட்டுக்குள் அனுப்பினர்.

ஆனால், சீர்திருத்தமே செய்ய முடியாத அளவு அனைத்தும் கெட்டு விட்டன. இனிமேல் மிகத் தீவிரமான (drastic steps) நடவடிக்கை கூடப் பயன் தராது. அனைத்தையும் அன்பு, அமைதி, சமாதானம், விட்டுக் கொடுத்தல், விளங்க வைத்தல்... எனும் அருள்நெறியால்தான் நலமாக்க முடியும். (Divination is better than drastic approaches to redeem India) **<u>'இந்தியாவைச் சீர்திருத்திட அல்லது காப்பாற்றத் தீவிரவாதத்தை விடத் தெய்வீக</u>**

**முறையே சிறந்தது’** என்று உலக மாபெரும் மார்க்சியச் சிந்தனையாளரும், பகுத்தறிவு மேதையும், அரசியல் வித்தகரும், மகாஞானியுமான சித்தர் காகபுசுண்டர் ம. பழனிச்சாமி பிள்ளை அவர்களே கூறிச் சென்று விட்டார். அவரின் நேரடி வாரிசாகவும், தத்துவ வாரிசாகவும் உள்ள யாம் அவரைப் பின்பற்றியே செயல்படுகிறோம்.

எனவே, நமது **மதவழி மறுமலர்ச்சிப் பணி**களை விரிவு செய்யும் திட்டத்தை இதில் அறிவிக்கிறோம். உடனடியாகச் சுடுகாடு, இடுகாடு, நன்காடு, புதைகாடு, விடுகாடு, நடுக்காடு, அடவி, அருவிச்சாரல், மலைச்சாரல், மலைமுகடு, ஆற்றுப்படுகை, ஆற்றிடைக் குறை, கடல், கடலிடைத் தீவு... முதலிய இடங்களில் உள்ள உருவங்கள், அருவுருவங்கள், அருவங்கள் உயிர்த்தெழுந்து பெருவீரம் காட்டிப் போராடத் தயார் செய்யப்படல் வேண்டும்.

கோயில்களுக்குள் உள்ள கருவறை வாழ் நாற்பத்தெட்டு வகையினரும் சூழ்நிலைக் கைதிகளாக, சுகபோகப் பிரியர்களாக உள்ளார்கள். எனவே, நமது செயல் வெட்டவெளிக் கருவறைகளாக, யாக சாலைகளாக, வேள்விச் சாலைகளாக, சத்திச் சாலைகளாக, சித்திச் சோலைகளாக, பத்திப் பாட்டைகளாக, அருட் கோட்டங்களாக, குருகுலங்களாக.... மாறட்டும்! மாறட்டும்! மாறட்டும்! முதல் நிலையாக ஆலவாய்மூதூர் தத்தனேரிச் சுடலைப் பத்திரகாளியின் பெயரால் அருட்பட்டப் பெருவீரர்கள் தயாராகிறார்கள்.

(1) வேம்படியான் மணி => ஆலவாய்மூதூர் தத்தனேரிச் சுடலைப்பத்திரகாளி பீடாதிபதி.
(2) வெ.செகதீசன் => ஆலவாய்மூதூர் தத்தனேரிச் சுடலைப் பத்திரகாளி ஆதீனம்.
(3) சு.இராசுநாயுடு => ஆலவாய்மூதூர் தத்தனேரிச் சுடலைப்பத்திரகாளி பண்டாரசந்நிதி.

(4) S.R.நீலமேகம்பிள்ளை => ஆலவாய்மூதூர் தத்தனேரிச் சுடலைப்பத்திரகாளி தம்பிரான்.

(5) மேலமடைப் பாண்டியன் => ஆலவாய்மூதூர் தத்தனேரிச் சுடலைப்பத்திரகாளி ஆச்சாரியார்.

(6) அழுக்கையா => ஆலவாய்மூதூர் தத்தனேரிச் சுடலைப்பத்திரகாளி குருக்கள்.

(7) சிவகெங்கை இராசுநாயுடு => ஆலவாய்மூதூர் தத்தனேரிச் சுடலைப்பத்திரகாளி அமளிகை.

(8) மீ.மா.மருதமுத்துப் பிள்ளை => ஆலவாய்மூதூர் தத்தனேரிச் சுடலைப்பத்திரகாளி இருக்கை, திருச்சி ஓயாமெரிச் சுடலைப்பத்திரகாளி பீடாதிபதி - மதுரை அழகர் கோயில் பதினெட்டாம்படிக் கருப்புகள் சன்னிதானம்.

(9) நாராயணசாமி நாயுடு => ஆலவாய்மூதூர் தத்தனேரிச் சுடலைப்பத்திரகாளி திருவடி.

(10) அழகுமலை => ஆலவாய்மூதூர் தத்தனேரிச் சுடலைப்பத்திரகாளி அருளாடுநாயகம்.

அனைவருக்கும் படித்துக் காட்டி அறிவிப்புச் செய்க.

**திருவாணை, குருவாணை.**

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!
அன்பே சிவம்!

அன்பு

**ஞாலகுரு சித்தர் கருவூரர்,**

30/11/1983.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: வேம்படிதாளம் சித்தரடியான் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# நான்காவது முப்பெருவிழா ஏற்புத் திருவோலை

10-12-83இல் ஞாலகுரு சித்தர் கருவூரர் சொல்ல அருள்மிகு தாயுமானவர் சன்னிதானம் சு.இராசுநாயுடு அவர்கள் மதுரை மாவட்ட இ.ம.இ., அ.வி.தி. சித்தர்நெறி ஆர்வலர், ஆதரவாளர் முதலியோர் அனைவருக்கும் விடுத்துக் கொள்ளும் நா.மு.வி. ஏற்புத் திருவோலை.

1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே. ஞாலகுருவாக உள்ள யாம் எல்லா வல்லமைகளையும், அதிகாரங்களையும் பெற்றிருந்தாலும்; எழுதுவதையும் பேசுவதையும் கூடத் திருவுள ஒப்புதல்களும், தாத்தாக்கள் ஆத்தாக்கள் சம்மதங்களும், உலக அருளாளர்களின் இசைவுகளும், பூசை முடிவுகளும், தவ உணர்வுகளும் என்ன சொல்லுகின்றனவோ அவற்றிற்கேற்பதான் நிகழ்த்துகிறோம். எனவே, யாம் யாரையும் கடுமையாகக் கண்டிக்கவோ, எச்சரிக்கவோ நேரிட்டால் உடனே அதை ஏற்றுச் செயல் படுத்துவதுதான் நல்லது; பயன் தரக் கூடியது; பாதுகாப்பானது.

**<u>குறிப்பு</u>**:- தஞ்சாவூர் விளாங்குடி சித்தரடியான் துரைச்சாமியின் முடிவு எல்லோருக்கும் ஓர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சித்தர் மகன் என அறிவித்தும் பெரி.முத்தையாவை காப்பாற்றுவதற்குப் பெரும்பாடுபட்டு விட்டோம். எனவே, இப்போது திருவுள ஏற்பாடுகளுக்காக சித்தர் மகன் சோ.இரவீந்திரன் திருச்சியிலிருந்து வரவழைத்துக் கொண்டாலும் அவன் சிறிது காலத்திற்கு யாம் மீண்டும் அனுமதி தரும் வரை மதுரை மாவட்டத்துக்குள் செயல்படாமல்; திருச்சி, தஞ்சை ஆகிய இரு மாவட்டங்களுக்குள் மட்டும் செயல்படல் வேண்டும். முதலைக்கு தண்ணீருக்குள்

இருந்தால்தான் வலிமை. அதுபோல், இவனுக்குத் திருச்சி, தஞ்சை மாவட்டங்கள்தான் வலிமை என்ற பேருண்மையை உணர்ந்தும் உணர்த்தியும் செயல்படுக. நாம் கோழைகள் அல்ல என்றாலும் அஞ்ச வேண்டியவைகளுக்கு அஞ்சித்தான் தீர வேண்டும்.

நம் கண்போன்றவர்களை காத்திட கடுமையான கண்டிப்பு, தண்டிப்பு, எச்சரிக்கை தேவைதான். வருந்த வேண்டாம். இந்த வாசகத்தையே குருவாணையாக ஏற்று சித்தரடியார் சோ.இரவீந்திரனை உடனே வரவழைத்து விழா முடியும்வரை மதுரை வட்டாரத்தில் செயல்படச் சொல்லுங்கள். எக்காரணம் பற்றியும் அவனுக்கு உலகியலாக ஆபத்துக்கள் வந்துவிடக் கூடாது. ஏனெனில் அவனுக்கு எதிராக பல மிரட்டல் அஞ்சல்கள் வந்துள்ளன. எச்சரிக்கை.

2) உங்கள் அனைவரின் வேண்டுகோள் அஞ்சல் கண்டோம். உங்களுடைய விருப்பத்தை ஏற்றுக் கொண்டோம். 22-12-83 இரவு சென்னையிலிருந்து பாண்டியன் விரைவு வண்டியில் வர ஏற்பாடுகளைச் செய்கிறோம். கவலை வேண்டாம். உங்களுடைய விருப்பமே பெரும்பாலும் தாத்தாக்கள் ஆத்தாக்களால், திருக்களால், உலக அருளாளர்களால் ஏற்றுக் கொள்ளும்படிச் செய்யப்படும்.

யாம் சாதாரண மக்களோடு மக்களாக சமுதாயத்தின் அடித்தளத்திலிருக்கும் சாமானியர்களின் பதிலியாக வாழ்ந்தும் வளர்ந்தும் வருகிறோம். எனவே, சமுதாயத்தின் அனைத்து விதமான கேடுகளையும், கொடுமைகளையும், கடுமைகளையும், வறுமைகளையும், நோய்களையும், ஏக்கங்களையும் போக்கி நலம் விளைவிக்க வில்லினின்று புறப்பட்ட அம்பாக வெகுவேகமாகச் செயல்பட்டுக் கொண்டுதான் இருப்போம். எனவே எம்மோடு செயல்படுகிறவர்கள் மிகவும் சுறுசுறுப்பாகவும், விறுவிறுப்பாகவும், பொறுப்பாகவும் உடனுக்குடன் எல்லா செய்திகளையும், நிகழ்ச்சிகளையும், அஞ்சல்களையும் பற்றிய விளக்கங்களை அல்லது பதில்களை தேதி குறிப்பிட்டு உடனுக்குடன்

எழுதிக் கொண்டே இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அடிக்கடி கடுமையான கண்டிப்புகளுக்கும், எச்சரிக்கைகளுக்கும் உள்ளாக நேரிடும். நாம் முழுமையான பண்பாட்டுப் புரட்சியை மதவழியில் செய்ய முற்படுகிறோம்.

ஆனால் சமுதாயவாதிகளும், அரசியல்வாதிகளும் மத மறுப்பாளர்களாக, வெறுப்பாளர்களாக, எதிர்ப்பாளர்களாக, விரோதிகளாக இருக்கிறார்கள். இவற்றிற்கெல்லாம் மேலாக மதத் துரோகிகள் நிறைய இருக்கிறார்கள். எனவே நாம் எந்த நேரத்திலும், எந்த வடிவத்திலும், எங்கிருந்து வேண்டுமானாலும், எப்படிப்பட்ட ஆபத்தையும் அடைய நேரிடும். அதனால் நாம் ஒற்றுமையோடு ஒருங்கிணைந்து ஒத்த கருத்தினராய் எப்போதும் செயல்படக் கற்றுக்கொள்ள வேண்டும்.

உலகம் முழுவதும் கூடி வாழ வேண்டும் என்பதே நமது கொள்கையானாலும்; ஒவ்வொரு இனமும் தன்னுடைய மொழி, பண்பாடு, நாகரிகம், மதம், நாட்டுப் பாரம்பரியக் கூறுகள் ... முதலியவைகளை பாதுகாத்துக் கொள்ளும் எல்லாவித தன்னுரிமைகளும் தனித்துப் பெற்றிருக்க வேண்டும். யாரும் யாரையும் அடிமைப்படுத்தவோ, சுரண்டவோ, ஏமாற்றவோ கூடாது, கூடாது, கூடாது, கூடவே கூடாது என்பதுதான் நமது தத்துவமும், சித்தாந்தமும், வேதாந்தமும் ஆகும். இவற்றை நம்மவர்கள் நன்கு புரிந்தும், உணர்ந்தும்; பிறர்க்குப் புரியவைத்தும், உணர்த்தியும் செயல்பட்டேயாக வேண்டும்.

எனவேதான், கருத்துக் குழப்பம், செயல் மயக்கம், தனிமனித தயக்கம், ... முதலியவை ஏற்படா வண்ணம் எமது கட்டுரைகளையும், அஞ்சல்களையும் பல நகல்கள் எடுக்குமாறும்; முடிந்த வரை அச்சிடுமாறும் கூறுகிறோம். இதனைப் புரிந்து ஒத்துழைப்பு நல்குக.

3) நம்மவர்களில் யாருக்கும் தனிப்பட்ட வகையில் கொள்கை அளவிலோ, செயல் அளவிலோ கருத்து மாறுபாடு, சண்டை சச்சரவு, போட்டி, பொருமை, போராட்டம் வந்து விடவே கூடாது. அப்படி ஏதேனும் வந்தால் எமது முடிவே இறுதியானதாக இருக்க வேண்டும். எச்சரிக்கை. இதனுல்தான், எல்லோரிடமும் தங்களை முழுமையாகக் குருவுக்குக் காணிக்கையாகத் தரும்படி (**சரணுகதித் தத்துவம்**) உறுதிமொழி வாங்கப் படுகிறது.

குருபாரம்பரிய வாசகப்படி "குருவும், திருவும் ஒன்று. குருவே அனைத்துக்கும் கரு. குருவே ஆவி, ஆன்மா, உயிர் மூன்றையும் ஒன்ருக்க முடியும். குருவே இறை, உயிர், தளை (பதி, பசு, பாசம்) ஆகிய மூன்றையும் சித்தி செய்து தர முடியும். ..." என்ற வாசகங்களை நம்மவர்கள் உணர்ந்தும் உணர்த்தியும் செயல்பட வேண்டும். அப்பொழுதுதான், இந்த ஐந்நூறு கோடியாண்டுகளில் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி தோன்றியிருக்கும் பெறற்கரிய பேரின்ப வாய்ப்பினை முழுமையாகப் பயன்படுத்தி குருவால் இட்டும், தொட்டும், சுட்டியும் அருளப் பெற்று இச்சைகளையும், அச்சங்களையும், கூச்சங்களையும், மாச்சரியங்களையும் கடந்து குருவோடு இரண்டறக் கலந்து பிறவாயாக்கைப் பெருநிலைகளைப் பெறமுடியும். தவருன செய்திகளால், கருத்துக்களால் வாழையடி வாழையென அருளாளர்களை உருவாக்கும் மாபெரும் அருட்பணி விரிவாக்கத் திட்டம் பாதிக்கப் பட்டுவிடக் கூடாது. மொழி கடந்து, இனம் கடந்து, நாடு கடந்து, மதம் கடந்து, காலம் கடந்து அருட்பணி விரிவாக்கத் திட்டத்தைப் பரப்பிட நம்மவர்கள் முயல வேண்டும். இதற்கு மிகுந்த முன்னெச்சரிக்கை தேவை. புரிந்து செயல்படுக.

**குறிப்பு**:- எமது வருகையைப் பற்றிய அறிவிப்புகள், சுடலைப் பூசை பற்றிய அறிவிப்புகள், பொதுக் கூட்டம், அருள் வழங்கல்,

அருளாளர்களைத் தயாரித்தல், இ.ம.இ. கொடியேற்றல், கிளை அலுவலகம் திறத்தல், இ.ம.இ. ஊழியர்களுக்கு அறிவுரை வழங்கல், சிறப்புச் சொற்பொழிவு ... முதலிய அனைத்திற்கும் அச்சிட்ட அறிக்கைகளுடன்; அந்தந்த வட்டார காவல்துறை அலுவலகத்தில் முன்னறிவிப்பு வேண்டுகோள் கொடுத்து அனைத்திற்கும் நகல்களைக் கோப்புகளில் தொகுத்து வைக்க வேண்டும்.

நாம் அரசியல்வாதிகள் அல்ல என்றாலும், அரசியலும் நமக்கு உட்பட்டதுதான் என்றாலும், நமக்கு சட்டபூர்வமான சிக்கல்கள் வராமல் எல்லாவிதமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்து விடுங்கள். நம்மைச் சார்ந்த வழக்கறிஞர்களை எல்லா நிகழ்ச்சிகளிலும் விழிப்போடு பங்கு பெறச் செய்யுங்கள். நாம் அப்பாவிகளாகவோ, ஏமாளிகளாகவோ இருந்து விடக்கூடாது. எச்சரிக்கை. எல்லா அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் நமது இ.ம.இ.யிலும், அ.வி.தி.யிலும் பங்கு பெறலாம், பங்கு பெறலாம், பங்கு பெறலாம் என்ற திட்டத்தை செயலாக்குங்கள்.

**<u>குறிப்பு</u>:-** இதற்காகத்தான் கிளை அலுவலகப் பதிவு அட்டையிலும், அ.வி.தி. அருளாளர்கள் பட்டியல் ஏடுகளிலும் (அருட்பட்டம் பெற்றவர்கள்), சந்தா (இரசீதுகளிலும்) சான்றுப் பட்டியலிலும் உறுப்பினர்களின் பெயர்களை எழுதும்போதே அவர்கள் எந்த அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் என்ற விவரத்தையும் குறிக்குமாறு ஆணை இட்டிருக்கிறோம்.

அதாவது **<u>நாம் அனைத்து மதங்களையும் ஒன்றாக்குவதுபோல் அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒன்றாக்கித்தான் தீர வேண்டும். ஏனெனில் சாதிவெறிகளும், மதவெறிகளும் மனித சமுதாயத்திற்கு எவ்வளவு கேடுகளை வழங்குகின்றனவோ அதை விடப் பன்மடங்கு கேடுகளைக் கட்சிவெறிகள் வழங்குகின்றன. இப்பேருண்மையினை அனைத்துக்கும் மூலமாக, முதலாக, தாயாக, தலைமையாக, வழியாக,</u>**

**வழிகாட்டியாக இருக்கின்ற அருளாளர்களாகிய நம்மால்தான் துணிவோடும், கனிவோடும் வெளிப்படையாக விளக்கி உணர்த்திட முடியும், முடியும், முடியும்**.

4) நாம் ஆத்திகர்கள்தான் நாடாள வேண்டும்; இந்துமதம் தான் இந்தியாவை ஆள வேண்டும் என்ற கொள்கையை பூசையறைகளில், யாகமேடைகளில் மட்டும் கூறிக் கொண்டிருந்தால் பயனில்லை. அனைத்துச் சமய, சமுதாய, கலை, இலக்கிய, தொழில், அரசியல்வாதிகளிடமும்; அவர்களின் அமைப்புகளிலும் மேற்படி கருத்து செயலுக்கு வரும்படிச் செய்ய வேண்டும்.

இதன் முதல் கட்டமாகத்தான் அல்லது ஆரம்ப முயற்சியாகத்தான் யாம் '*தேர்தல் அறிக்கை*' என்ற அஞ்சல் கட்டுரையை விரைவாக அனுப்பினோம். அதற்கு முன்னுரையும், அறிமுக உரையும் விரைவில் அனுப்பி வைப்போம். அம் மூன்றையும் இணைத்து முடிந்தால் எமது வருகையின் போதே பலருக்கும் வழங்கலாம். அப்பொழுதுதான் அரசியலில் நேரிடையாக ஈடுபடாத நாம்; அரசியலில் உள்ள அனைத்து விதமான குறைகளையும், தவறுகளையும், முறைகேடுகளையும், சீர்கேடுகளையும், தேக்கங்களையும், வீக்கங்களையும், முடக்கங்களையும், அடக்கங்களையும், சமுதாய நல துரோகங்களையும், விரோதங்களையும், ஏமாற்றுக்களையும், சுரண்டல்களையும் முழுமையாக அகற்ற முடியும்; தேவையான மாற்று ஏற்பாடுகளையும் செய்ய முடியும்.

அதாவது மதத் தத்துவம்தான் நாடாள வேண்டும். மதத் தலைவர்கள்தான் அரசுக்கும், அரசியலுக்கும் விழியாக, வழியாக இருக்க வேண்டும்! இருக்க வேண்டும்!! இருக்க வேண்டும்!!! இருக்க முடியும்! இருக்க முடியும்!! இருக்க முடியும்!!!

**<u>குறிப்பு</u>:-** உரிய காலத்தில் பெரிய அளவில் நமது தேர்தல் அறிக்கை அச்சிட்டு வெளியிடப்பட்டால்தான் அரசியல்வாதிகள் மதத்தையும், மதத் தலைவர்களையும், மத நிறுவனங்களையும், மத

வாதிகளேயும் சூழ்ச்சியாக, இகழ்ச்சியாக, தாழ்ச்சியாக நலிவுபடப் பேசுவதும், செய்வதும் தடுத்து நிறுத்தப்படும்.

அதாவது எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களானுலும் உண்மையான மதவாதிகளாக இருந்தால் நமது கொள்கைகளே ஏற்றுக் கொண்டால் நமது இ.ம.இ.யின் பதிலிகளாகவே தேர்தலில் ஈடுபடலாம். இதற்கு அவர்கள் நமது இ.ம.இ.யின் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். நமது இ.ம.இ.யில் இல்லாத மதவாதிகள் நமது ஆதரவாளர்களாகத்தான் தேர்தலில் போட்டியிட முடியும். அதாவது, எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் உண்மையான மதவாதிகளாக இருந்தால் நமது ஆதரவு அவர்களுக்கு உண்டு. இதுவே நமது தேர்தல் அறிக்கையின் முழுமையான தத்துவ அடிப்படையும், செயல் சித்தாந்தமும், கொள்கைக் குறிக்கோளுமாகும். எனவேதான், நாம் கையெழுத்து நகல் பிறதிகளின் மூலமும், அச்சிட்ட அறிவிக்கைகளின் மூலமும் நமது கருத்துக்களே முழக்குகிறேம்! முழக்குகிறேம்!! முழக்குகிறேம்!!!

5) இந்த நான்காவது முப்பெருவிழா நிகழ்ச்சிகள் அனேத்தும் **"இந்து மறுமலர்ச்சி சிந்தனே"** வளவளர்ச்சி முயற்சியாக இருக்க வேண்டும். எனவே, இங்கு ஒரு சில இந்து மறுமலர்ச்சிச் சிந்தனேகளேக் குறிப்பிட விரும்புகிறேம்.

a) பதினெண்சித்தர்கள் படைத்த இந்துமதத்தில் சாதிப் பிரிவுகளோ, வேற்றுமைகளோ, ஏற்றத் தாழ்வுகளோ இல்லே! இல்லே!! இல்லே!!! இல்லவே இல்லே!

b) இந்துமதமே அனேத்து மதங்களுக்கும் மூலமாக, முதலாக, தாயாக, ஆரம்பமாக, அடிப்படையாக இருப்பதால் எந்த மதத்திடமும் மறுப்போ, வெறுப்போ, எதிர்ப்போ, விரோதமோ, பகையோ, போட்டியோ, பொருமையோ, சண்டை சச்சரவோ,

போரோ நிகழ்த்தவே நிகழ்த்தாது. அது தேவையுமில்லை. அதாவது ஒரு தாய் தன்னுடைய பல குழந்தைகளையும் அன்புடன் அரவணைத்துப் பாதுகாத்து வளர்ப்பதுபோல் இந்துமதம் அனைத்து மதங்களையும் ஏற்றுப் போற்றிச் சமத்துவத்துடனும், சமாதானத்துடனும்தான் வாழும்.

c) பதினெண்சித்தர்கள் படைத்த இந்துமதத்திற்கு தமிழ் மொழிதான் பூசைமொழி என்பதால் இந்துமதத்தைப் போலவே தமிழ்மொழிக்கு மற்ற மொழிகளிடத்து மறுப்போ, வெறுப்போ, எதிர்ப்போ, பகையோ கிடையாது! கிடையாது!! கிடையாது!!! கிடையவே கிடையாது! இது அனைத்து மொழிகளும் தன்னுரிமையோடும், அனைத்து வகையான வளவளர்ச்சி வசதி வாய்ப்புக்களோடும், உரிமைகளோடும் இருந்திடல் வேண்டும் என்பதே தமிழ்மொழியின் தத்துவம்; இந்துமதத்தின் வேதாந்தம்; தமிழர்களின் சித்தாந்தம். தமிழ்மொழி போல் உலகிலுள்ள எல்லா மொழிகளுமே பூசைக்குப் பயன்படக் கூடியவைதான். ஆனால், சித்திக்குரிய கால அளவுதான் நிலைமைக்கேற்ப மாறும். எனவே, இந்த உலகிலுள்ள அருளாளர்களும், அருள்நெறிகளும் சித்திக்கும் முத்திக்கும் வழிகாட்டக் கூடியவைதான் என்பதே தமிழ்மொழியின் தத்துவமாகும். அதாவது எம்மதமும் சம்மதமே. ஆனால், மத ஆதிக்கமோ, சர்வாதிகாரமோ, சுரண்டலோ இந்துமதத்தில் அனுமதிக்கப் படுவதில்லை.

d) பதினெண்சித்தர்கள் படைத்த இந்துமதம் துறவறம் பற்றிக் கூறவே இல்லை. அதாவது, பெண்ணை, மண்ணை, பொன்னை, சொந்தபந்தங்களைத் துறந்துதான் கடவுளின் அருளைப் பெற வேண்டும், அல்லது தவம் செய்ய வேண்டும், அல்லது

விரதம் இருக்க வேண்டும், அல்லது சுவர்க்கத்தைப் பெற வேண்டும், அல்லது சித்திகளைப் பெற வேண்டும் என்ற மதக் கருத்து பதினெண்சித்தர்களின் இந்துமதத்திற்கு உரியதல்ல. அதாவது, சித்தர் நெறிப்படி துறவறம் என்ற ஒன்று கிடையவே கிடையாது.

எனவே, துறவற வாழ்க்கை என்பது பயித்தியக்காரத் தனமானது, பயனற்றது, மூடநம்பிக்கைக்கு உரியது, குருட்டுத் தனமானது, திருட்டுத் தனமானது, முரட்டுத் தனமானது, வறட்டுத் தனமானது, ... என்று மிகமிக கடுமையாகக் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

எனவே, இந்து மறுமலர்ச்சிச் சிந்தனைகளின் உயிரோட்ட அமைப்புக்களில் ஒன்று **'மதத் தலைவர்கள் முதல் தொண்டர்கள் வரை துறவற வாழ்க்கையைத் தவறான வாழ்க்கை'** என்று புரிந்து ஒப்புக்கொண்டே மத வாழ்க்கை வாழ வேண்டும்; பத்தி வாழ்க்கை வாழ வேண்டும்; அருள் வாழ்க்கை வாழ வேண்டும். அதாவது, பதினெண்சித்தர்கள் படைத்த இந்துமதம் **'இல்லறமல்லது நல்லறம் இல்லை'** என்று மிகத் தெளிவாகக் கூறுகின்றது. எனவே, துறவிகள் மதத்தின் பெயரால் தலைமை தாங்குவதோ, வழிகாட்டுவதோ, தொண்டுகள் புரிவதோ மிகக் கடுமையாக மறுக்கப் படுவதும், எதிர்க்கப் படுவதும், வெறுத்து விமரிசிக்கப் படுவதும்தான் இந்து மறுமலர்ச்சிச் சிந்தனையின் வளவளர்ச்சிப் பணிகள் விழிச்சியும், எழிச்சியும், செழிச்சியும் பெறச் செய்திடும்.

அதாவது, உடனடியாக மதத்தின் பெயரால் **துறவறம் என்ற போலி வாழ்க்கை, மடமை வாழ்க்கை, பயனற்ற வாழ்க்கை,**

**<u>இந்துமதத்திற்குப் பொருந்தாத வாழ்க்கை வாழ்வது</u>** கடுமையாகக் கண்டிக்கப்பட்டுத் திருத்தப்பட்டேயாக வேண்டும். இந்துமதத்திற்கும் துறவறத்திற்கும் தொடர்பே இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவே இல்லை! "<u>துறவறத்தால் சிறப்பான பயன் எதுவும் விளையாது! விளையாது!! விளையாது!!! விளையவே விளையாது! துறவற வாழ்க்கை என்பது தியாக வாழ்க்கை அல்ல. அது ஒரு தற்கொலை வாழ்க்கை!</u>" விரிவஞ்சி இது பற்றி இத்துடன் நிறுத்துகின்றோம்.

**<u>குறிப்பு</u>:-** பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தாங்கள் உண்டாக்கிய கடவுட் கலைகள், தெய்வீகக் கலைகள், பேய்க் கலைகள், நோய்க் கலைகள், தேய் கலைகள், அருட் கலைகள் நாற்பத்தெட்டு, ஆய கலைகள் அறுபத்திநான்கு, பூசை, ஞானம், தவம் முதலியவைகளை முறையாகவும், நிறையாகவும் கற்றுக் கொள்ளும் ஆர்வம் உள்ளவர்களை 'குருவழி வாரிசுகள்' என்ற பெயரில் தயாரிக்கும் போது பயிற்சிக்குரிய காலங்களில் திருமணம் செய்து கொள்ளாமல் செயல்படுகிறவர்களை 'சித்தரடியார்' என்று பெயரிட்டுத் தயாரிக்கும் மரபை உண்டாக்கி இருக்கிறார்கள். ஆனால், **<u>இது துறவறம் அல்ல. ஏனெனில், மேற்படி சித்தரடியார்கள் பெண்ணின்பம் துய்க்கக் கூடாது என்று தடை கிடையாது.</u>** இதேபோல் திருமணம் ஆகி மனைவியுடனும் குழந்தைகளுடனும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் குறிப்பிட்ட கால அளவுக்கு குடும்பப் பொறுப்புகளிலிருந்து விலகி அதிகமான அளவு காலத்தையும், கருத்தையும், முயற்சியையும் சித்தர்நெறிக் கலைகளைக் கற்பதில் செலவிடுவார்களானால் அவர்களும் 'சித்தரடியார்' என்று அழைக்கப் படுவதே மரபாக இருக்கிறது.

அதாவது, இவர்கள் பெண்ணின்பம் துய்ப்பது மறுக்கப்படவில்லை. **<u>எனவே, சித்தரடியார் என்ற சொல் இன்றைய நாட்டு நடப்பில்</u>**

**<u>இல்லறத்தை விட்டுவிட்டுத் துறவறம் ஏற்று வாழும் துறவிகளின் நிலையைக் குறிக்காது</u>**.

e) இன்றைய நாட்டு நடப்பில் ஐயப்பசாமி பத்தர்கள், வேறு பல விரதங்களை மேற்கொள்ளும் இந்துமதப் பத்தர்கள் *பெண்ணின்பம் ஆன்மீக வாழ்விற்குத் தடையானது, தவறானது, மறுக்கப்பட வேண்டிய ஒன்று...* என்றெல்லாம் கருதிச் செயல்படுகிறார்கள். பதினெண்சித்தர்கள் படைத்த இந்துமதத்தின்படி இக்கருத்து காட்டுமிராண்டித்தனமானது, குருட்டுத்தனமானது, பயனற்ற வீண் கற்பனையானது, மடமையானது, அறியாமை மிகுந்தது, ஏமாளித்தனமானது .... என்று கண்டிப்பதற்கு உரியது.

ஏனென்றால், விண்ணையும், மண்ணையும், மலைகளையும், ஆறுகளையும், கலைகளையும், கருத்துகளையும், உணர்வுகளையும் பெண்மை வடிவமாகப் படைத்து ‘அன்னை வழிபாடு’, ‘தாய்மையைப் போற்றிப் பேணுதல்’, ‘சத்தியை வணங்குதல்’ ... என்று இந்துமதத்தின் கருவாகப் பெண்மையைப் போற்றி புகழ்ந்திருக்கிறார்கள் பதினெண்சித்தர்கள். மேலும், ஒவ்வொரு ஆணின் தாயும், மனைவியும், மகளும் பெண் என்னும் புனித வடிவில் கனிவோடும், இனிமையோடும், அன்போடும், அழகோடும் உதவியாக இருக்கின்றார்கள். இந்தப் பெண்ணினத்தை ஆன்மீக வாழ்வில் அல்லது மத வாழ்வில் அல்லது பத்தி நெறியில் எப்படி பாவத்திற்குரியது அல்லது சாபத்திற்குரியது அல்லது தீண்டத்தகாதது என்ற கருத்துப் பிறந்தது? இக்கருத்தின் எந்த விதமான நிழலோ, சாயலோ பதினெண்சித்தர்களின் இந்துமதத்தில் இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவே இல்லை!!!!

எனவே, இது இந்தியாவிற்கு வந்த ஆரியர்களின் கருத்தாக இருக்க வேண்டும். அல்லது வேறு மதத்தவர்களின் கருத்தாக இருக்க வேண்டும். எனவே, இக்கருத்தை நேரிடையாக மறுத்தும், எதிர்த்தும், கண்டித்தும் செயல்பட வேண்டியதே இந்து மறுமலர்ச்சிச் சிந்தனையாகும். இதனை இ.ம.இ.யும், அ.வி.தி.யும் முழுமையாக விளக்கிச் செயல்பட வேண்டும்.

இந்துமதமே சத்தி வழிபாட்டுக்கு உரியதுதான். அதாவது அன்னை வழிபாட்டுக்கு உரியதுதான். இந்துமதத்திலுள்ள பெண் கடவுள்கள் அனைவருமே போர்க்கோலத்தில்தான் காட்சியளிக்கிறார்கள். இவை வெறும் காட்சியல்ல. மேற்குறித்த பெண் தெய்வங்கள் வீரப் போர் புரிந்து பகைவர்களைக் கொன்ற வரலாறுகள் எண்ணற்ற புராணங்களாகவும், இதிகாசங்களாகவும் இருக்கின்றன. அவையே இந்துமதத்தின் கண்கள் என்றால் மிகையாகாது. எனவே, பெண் தெய்வங்களை வழிபடும் இந்துமதத்தில்; *பெண்ணினத்தைச் சாபத்திற்கு உரியது, பாவத்திற்கு உரியது, தீண்டத்தகாதது* என்று கூறுவது ஏற்கவே முடியாத ஒன்றாகும்.

இருந்த போதிலும் மேற்படிக் கருத்துக்கள் இந்துமதத்தில் எப்படியோ புகுந்து விட்டதால்தான் இந்து மறுமலர்ச்சிச் சிந்தனைகள் பிறக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதாவது, இந்துமதத்தில் அன்னியர்களால் ஆபாசக் கற்பனைகளும், கதைகளும், மூடநம்பிக்கைகளும்; கண்மூடித்தனமான பயனற்ற பழக்க வழக்கங்களும், குருட்டு நம்பிக்கைகளும்; சுரண்டலுக்கும், எதேச்சதிகாரங்களுக்கும், முதலாளித்துவத்திற்கும், ஏமாற்றுக்களுக்கும், சர்வாதிகாரங்களுக்கும் வழிவகுக்கக் கூடிய சாத்திர சம்பிரதாயங்களும்; பொய்யான பூசைகளும்; தவறான

விரத முறைகளும் புகுத்தப்பட்டு விட்டன. இவற்றை முறையாகவும், முழுமையாகவும் அகற்ற முற்படும் மாபெரும் வரலாற்று முக்கியத்துவமான நிகழ்ச்சிதான் இ.ம.இ.யின் வளர்ச்சியும், அ.வி.தி.யின் வளர்ச்சியும்.

அதாவது, பதினெண்சித்தர்கள் படைத்த இந்துமதம் ஒரு பகுத்தறிவு மதம்; ஒரு விஞ்ஞான மதம்; ஒரு சமூக விஞ்ஞான மதம், தத்துவம்; ஒரு தனிமனித வாழ்வியல் தத்துவம்; ஒரு பொருளாதார அரசியல் தத்துவம்; ஒரு புதுமை விரும்பும் புரட்சித் தத்துவம்.... என்பதுதான் உண்மை. இப்பேருண்மைகளை விளக்கவே இ.ம.இ.யும், அ.வி.தி.யும் செயல்படுகின்றன.

பொதுமக்கள் பொதுவாகச் சித்தர்கள் என்றால் சித்து விளையாடல்கள் செய்கிறவர்கள் அல்லது மாயாவாதிகள் என்றே தெரிந்து வைத்திருக்கிறார்கள். இது மாபெரும் தவறு. சித்தர்கள் என்பவர்கள் ஆன்மீக வாழ்வில் தங்களுக்குக் கிடைக்கின்ற சித்து விளையாடல் சத்திகளையெல்லாம் வென்று இலைமறை காயாக நின்று செயல்படுபவர்களே. இதனையே **<u>“சித்துக்கள் அனைத்தையும் தனித்தனிக் கடந்தவர்களே சித்தர்கள்” என்ற குருபாரம்பரிய வாசகம் விளக்குகின்றது</u>**.

இன்றைய உலகியலுக்கேற்ப சித்தர்களைப் பற்றி விளக்க வேண்டுமென்றால் இம்மண்ணுலக மனித வாழ்வைப் படைத்த அறிவியல் மேதைகளே சித்தர்கள். அனைத்துச் சீர்திருத்தங்களையும் உருவாக்கும் கருவான பகுத்தறிவு வாதங்களைப் படைத்த சிந்தனைச் சிற்பிகளே சித்தர்கள். மானுட வாழ்வில் மென்மையும், நளினமும், அன்பும், கனிவும்,

பற்றும், பாசமும், தோழமையும், நட்பும், காதலும், தாய்மையும், கடமையும், நன்றியும், ... என்றென்றும் நிலைத்து நிற்கும்படி செய்த மானுட இயல்வாதிகளே சித்தர்கள் ... என்பன போன்ற வாசகங்கள் விளக்கங்கள் தரும்.

f) 'Sex is not a taboo to the Divine Life'. **பதினெண்சித்தர்கள் பெண்ணின்பம் தெய்வீக வாழ்வியல் சாதனைகளுக்குத் தடையானது அல்ல** என்ற பேருண்மையினை மிகமிகத் தெளிவாக விளக்கியிருக்கிறார்கள். அதாவது, <u>பதினெண்சித்தர்கள் படைத்த இந்துமதத்தில் எல்லா கடவுள்களுமே திருமணம் ஆனவர்களாகத்தான் இருக்கிறார்கள்</u>. 243 சத்தி பீடப் பூசைகளில் நேரடியாக பெண்ணையே கடவுளாக அமர்த்தி வைத்துப் பூசை செய்யும் பூசை முறைகள்தான் விரைவில் சத்திகளையும், சித்திகளையும், முத்திகளையும் தரக் கூடியவை என்று பரிந்துரைக்கப் படுகின்றன.

சிறப்பாக (1) பேதை, (2) பெதும்பை, (3) மங்கை, (4) மடந்தை, (5) அறிவை, (6) தெரிவை, (7) பேரிளம்பெண் என்று ஏழுவகையான பருவத்திற்குரிய (வயதிற்குரிய) பெண்களைப் பூசைக்குரிய கடவுள்களாக்கி வைத்துப் பூசை செய்தால் கிடைக்கக் கூடிய பயன்கள் விரிவாகப் பதினெண்சித்தர்களால் விளக்கிக் கூறப்பட்டுள்ளன.

மிகப் பெரிய, அரிய, சீரிய குருவழிச் சித்திப் பூசைகளுக்கு பாரம்பரியச் சித்தர்களால் (விந்துவழி வாரிசுகள்) மேலே குறிப்பிட்ட ஏழு பருவத்துப் பெண்களில் வாலை = அனாதிசத்தி; கன்னி = ஆதிசத்தி; குமரி = சத்தி; பராசத்தி, மகாசத்தி

... என்று இனங் கண்டுபிடிக்கப்பட்டு 243 வகையான சத்திபீடச் சக்கரங்களேயும் சித்தி செய்யும் பூசைகள் செய்யப்படும்; இதனுல், 1008 சிவாலயச் சக்கரங்களேயும், 108 திருப்பதிச் சக்கரங்களேயும் மிக எளிதாகச் சித்தி செய்யப்படும் என்ற இக் குருபாரம்பரியச் செய்திகளின் மூலம் **பெண் தெய்வீகச் சாதனேகளுக்குத் தடையல்ல** என்ற கருத்து வலியுறுத்தப் படுகிறது. அதாவது, பதினெண்சித்தர்கள்; "பெண்ணே தெய்வீகச் சாதனேகளுக்கு வழியாக, வழித்துணேயாக, வழிகாட்டியாக, வழிப்பயனுக அல்லது முடிவாக இருக்கிருர்கள்" என்று கூறுகிருர்கள்.

இக் குருபாரம்பரியச் செய்தியோடு இவ்வஞ்சலே நிறைவு செய்கிறோம். பெண்ணின் உரிமைக்காகவும், பெருமைக்காகவுமே பதினெண்சித்தர்கள் பாடுபட்டிருக்கிருர்கள். பெண்ணுக்கு விதவை என்ற ஒரு நிலே கிடையாது என்று பதினெண்சித்தர்கள் கூறுகிருர்கள். மேலும், "மாதந்தோறும் மலரும் மலரே பெண்" என்று மிகத் தெளிவாக குரு பாரம்பரியம் பெண்களின் புனிதத் தன்மையைப் பாராட்டுகின்றது. குரு பாரம்பரியம், 'பெண்ணே பூசைக்கு வந்த மலர்', 'படையலுக்கு உகந்த கனி', 'விண்ணுலக அருள் அணுக்களேத் தேக்கிப் பருகத் தரும் பொற்கிண்ணம்' ... என்றெல்லாம் பாராட்டுகின்றது.

இப்படிப்பட்ட கருத்துக்களின் மூலம்தான் 'இந்துமத மறுமலர்ச்சிச் சிந்தனே'கள் தோற்றுவிக்கப்பட்டு, போற்றிப் பேணி வளர்க்கப்பட்டு இப்போது இ.ம.இ. மூலமும், அ.வி.தி. மூலமும் உலகுக்கு வழங்கப்படுகின்றன. இவற்றை நமது அடியான்களும், அடியாள்களும், அடியார்களும், ஆர்வலர்களும், ஆதரவாளர்களும் தெரிந்தும், புரிந்தும், உணர்ந்தும் உலகுக்கு வழங்கக் கூடிய தரமும், உரமும், திரமும்,

தீரமும், வீரமும், அறமும் உடையவர்களாக உருவாக வேண்டும் என்ற அறிவிப்பினை வழங்கி இந்த அஞ்சலை நிறைவு செய்கிறோம்.

யாம், அங்கு வருவதற்குள் இதற்கு 20 நகல்களாவது எமக்குச் சென்னைக்கு அனுப்பி வைக்க வேண்டும். அந்த வட்டாரத்திலுள்ள பலரையும் பயன்படுத்தி அவசரமாக, அவசியமாக நகல்களைத் தயாரித்து அனுப்பி வைக்க வேண்டும். யாம் நிகழ்த்தப் போகும் சொற்பொழிவுகளின் சாரமும் சுருக்கமும் இதுவே என்பதால் இதனைப் பலருக்கும் பல இடங்களிலும் படித்துக் காட்ட முற்படுங்கள். முடிந்தால் இதை நன்கு உரக்கப் படிக்கச் சொல்லி 'டேப்' செய்து பல இடங்களிலும் போட்டுக் காண்பியுங்கள்.

ஏனெனில், மதத் துரோகிகளும், விரோதிகளும், பகைவர்களும், மறுப்பாளர்களும், வெறுப்பாளர்களும், மாற்று மதத்தவர்களும், தவறான அரசியல்வாதிகளும், பொறாமைக்காரர்களும் நம்மையும் நமது அமைப்புக்களையும், செயல்களையும் திரித்துக் கூறி ஆபத்துக்களை விளைவிக்க முயன்றிடுவர்! முயன்றிடுவர்!! முயன்றிடுவர்!!! எச்சரிக்கை! எச்சரிக்கை!! எச்சரிக்கை!!! முடிந்தால் இந்த முழு அஞ்சலையும் அச்சுப்போட முற்படுங்கள்.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!
அன்பே சிவம்.

அன்பு

**குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்.**
10-12-83.

**//உண்மை நகல்//**

நகல் எடுத்தது: சித்தரடியான் செல்வன் K. செல்வநாயகம்.

***//மூலநகல்: கையெழுத்துப் பிரதியாக இருந்தது.//***

# தமிழரைக் காக்கத் தயாரிக்கும் படையின் பாடிவீடு!

"..... என்றாவது ஒருநாள், எவராவது தமிழரைக் காப்பாற்ற நினைத்தால்; அவர்களை ஒற்றுமைப்படுத்தியே செயலில் இறங்க வேண்டும். அதற்குத் தமிழ்மொழியே வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக, வழிப்பயனாக, வழியின் எல்லையாக இருக்கும். அமிழ்தினும் இனிய தமிழ்மொழியைப் பெற்றும் தமிழர்கள் அகத்தாலும் உயர்வடைய முடியவில்லை; புறத்தாலும் உய்வடைய முடியவில்லை. இவர்கள் மதஞானம் பிறந்த தமிழ்மொழியை மறந்தும், துறந்தும், புறக்கணித்தும் மாற்று மொழிகளில் மத ஞானத்தைத் தேடித் தோற்று வேற்றார்க்கு அடிமையாகி வேட்டை கிடைக்காத வேடன் போல் திரும்பிப் புலம்பி, அலமந்து, நைந்து, சிதைந்து..... மாளுகிறார்கள். எனவே, இவர்களை ஆளுபவர்கள், அன்னியர்களாகவே இருக்கும் அவலம் அடிக்கடி ஏற்படுகிறது. எப்படியும் இவர்களைக் காப்பதற்கே நூல்களைத் தொகுத்தும், தொகுப்பித்தும், எழுதியும், எழுதுவித்தும் செயல்படும் எமது முயற்சிகளைக் கோடிட்டுக் காட்டுவதே தமிழரைக் காக்கத் தயாரிக்கும் படையின் பாடிவீடு ..."

**- குருபாரம்பரிய வாசகம்.**

அருளியவர் : **கருவூரார்.**

ஏட்டில் வரைந்தவர் : **கருவூர்த் தேவர்.**

**//'அருளாட்சி அழைப்பு அறிவிப்பு' என்ற தலைப்பில் 1983இல் குருதேவர் வழங்கிய அறிவிக்கையிலிருந்து எடுக்கப்பட்ட வாசகங்கள்.//**

**“அருளுலகில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்”** -- குருபாரம்பரிய வாசகம்.



“... இம்மண்ணுலக அருளாளர் வரிசையிலேயே முதன்முதல் அரசயோகத்தைத் துவக்கி மிகப்பெரிய வெற்றி நிலைக்குரிய சாதனை நிலையைத் தோற்றுவித்தவரும்; கருவறைக் கோபுரமுடைய **தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியவருமான பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களே** போர்க்கோலம் பூண்டு, படை நடத்தி, வேலோச்சியும், வாள் வீசியும், அத்திறங்கள் எய்தும், குருதியாறு ஓடவிட்டும்தான் ‘இந்து மறுமலர்ச்சி இயக்கம்’ வெற்றி பெறுமாறு செய்தார். ... ...”

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்** அவர்களின் குருவாணைப் படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப் படுகின்றன.



**அம்மையப்பர்**

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

**www.newsletters.gurudevar.org** **www.gurudevar.org**
**www.induism.org** ***Email:*** **indhuism@gmail.com**